## தலைப்புச் செய்திகள்

1. முன்னாள் பிரதமர் Atal Bihari Vajpayee -யின் நினைவு தினம் இன்று அனுசரிக்கப்படுகிறது.

2. குடியரசு துணைத்தலைவர் திரு. சி.பி. ராதாகிருஷ்ணன், இரண்டு நாள் பயணமாக இன்று தமிழகம் வந்துள்ளார்.

3. எண்ணெய் சுத்திகரிப்பு நிலையங்களில் சமையல் எரிவாயு உற்பத்தி திறனை அதிகரிக்க மத்திய அரசு உத்தரவிட்டுள்ளது.

4. பெல்ஜியத்தில் ஏற்பட்டுள்ள காட்டுத் தீ காரணமாக, இரண்டாயிரம் ஹெக்டேர் வனப்பகுதிகள் சேதமடைந்துள்ளன.

5. உலகக் கோப்பை ஹாக்கிப் போட்டியின் மகளிர் பிரிவில் இந்தியா இன்று சீனாவை எதிர்கொள்கிறது.

>>>>>><<<<<<

முன்னாள் பிரதமர் Atal Bihari Vajpayee-யின் நினைவு தினம் இன்று அனுசரிக்கப்படுகிறது.

இந்நாளையொட்டி, புதுதில்லியில் அமைந்துள்ள அவரது நினைவிடமான Sadaiv Atal-லில் குடியரசுத்தலைவர் திருமதி திரௌபதி முர்மு, குடியரசு துணைத்தலைவர் திரு. சி.பி. ராதாகிருஷ்ணன், பிரதமர் திரு. நரேந்திர மோடி உள்ளிட்டோர் மலர்தூவி மரியாதை செலுத்தினர்.

முன்னாள் குடியரசுத்தலைவர் திரு. ராம்நாத் கோவிந்த், மக்களவைத் தலைவர் திரு. ஓம்பிர்லா, பிஜேபி தலைவர் திரு. நிதின் நபின் உள்ளிட்டோரும் அஞ்சலி செலுத்தினர்.

இந்நாளையொட்டி குடியரசு துணைத்தலைவர் திரு. சி.பி. ராதாகிருஷ்ணன் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவில், அடல் பிஹாரி வாஜ்பேயி தொலைநோக்குப் பார்வையுடன் கூடிய சிறந்த நிர்வாகி, கவிஞர் என்ற நிலையில் நாட்டுக்கு பெருமை சேர்த்தவர் என்று கூறியுள்ளார்.

பிரதமர் திரு. நரேந்திர மோடி விடுத்துள்ள சமூக வலைதளப் பதிவில், Atal Bihari Vajpayee தொலைநோக்கு பார்வையுடன் கூடிய பிரதமராக விளங்கியவர் என்று கூறினார்.

அவரது தலைமைத்துவம் நாட்டை முன்னெடுத்துச் செல்வதில் முக்கியப் பங்கு வகித்ததாக கூறியுள்ளார்.

*மக்களவைத் தலைவர் திரு. ஓம் பிர்லா வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவில், Atal Bihari Vajpayee, தேசப்பற்று, ஜனநாயக மாண்பு, சிறந்த நாடாளுமன்ற உறுப்பினர் உள்ளிட்ட பண்புகளைக் கொண்ட தலைவர் என்று புகழாரம் சூட்டினார்.*

*மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவில், Atal Bihari Vajpayee தனது வாழ்க்கையை தேச நலனுக்காக அர்ப்பணித்தவர் என்று கூறியுள்ளார்.*

*பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவில், நாட்டின் ஜனநாயகத்தை வலுப்படுத்தியதில் அடல் பிஹாரி வாஜ்பாயின் பங்கு முக்கியமானது என்று தெரிவித்துள்ளார்.*

*தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவில், தேசத்தின் நலனையே தனது வாழ்வின் லட்சியமாக கொண்டு நாட்டின் வளர்ச்சிக்கும், முன்னேற்றத்திற்கும் தன்னலமின்றி அர்ப்பணித்த தலைவர் Atal Bihari Vajpayee என்று பெருமிதம் தெரிவித்துள்ளார்.*

*>>>>>><<<<<<*

*குடியரசு துணைத்தலைவர் திரு. சி.பி. ராதாகிருஷ்ணன், இரண்டு நாள் பயணமாக இன்று தமிழகம் வந்துள்ளார்.*

*சென்னையில் இன்று நடைபெறும் நாகாலாந்து முன்னாள் ஆளுநர் இல. கணேசனின் நினைவு நாள் நிகழ்ச்சியில் அவர் கலந்து கொள்கிறார்.*

*பின்னர், சென்னை அருகேயுள்ள தனியார் பல்கலைக் கழக பட்டமளிப்பு விழாவில் அவர் பங்கேற்கிறார்.*

*நாளை திருவாரூர் மத்திய பல்கலைக் கழகத்தில் 11-வது பட்டமளிப்பு விழாவிலும் திரு. சி.பி. ராதாகிருஷ்ணன் உரையாற்றுகிறார்.*

*>>>>>><<<<<<*

*அரசு மற்றும் தனியார் எண்ணெய் சுத்திகரிப்பு நிலையங்களில் சமையல் எரிவாயு உற்பத்தி திறனை அதிகரிக்க மத்திய அரசு உத்தரவிட்டுள்ளது.*

*மத்திய பெட்ரோலியம் மற்றும் இயற்கை எரிவாயு அமைச்சகம் வெளியிட்டுள்ள அறிக்கையில், நாட்டில் உள்ள 21 எண்ணெய் சுத்திகரிப்பு நிலையங்கள் நாள்தோறும் 63 ஆயிரத்து 810 டன் சமையல் எரிவாயுவை உற்பத்தி செய்ய வேண்டும் என்று தெரிவித்துள்ளது.*

*இதன்மூலம் கடந்த நிதியாண்டை விட சமையல் எரிவாயு உற்பத்தி, இருமடங்காக அதிகரிக்கக்கூடும்.*

>>>>>><<<<<<

ஜார்க்கண்ட்டில் பணியாளர் தேர்வு முறைகேடு விவகாரம் தொடர்பாக, மாணவர்கள் நடத்தி வரும் போராட்டம் தீவிரமடைந்துள்ளது.

தலைநகர் ராஞ்சியில் கடந்த 22 நாட்களாக மாணவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

மாநிலத்தில் உள்ள 24 மாவட்டங்களிலும் இன்று பேரணி நடைபெற்று வருகிறது.

முறைகேடு நடந்ததாக கூறி, பணியாளர் தேர்வை ரத்து செய்ய வேண்டும் என்றும், இதுகுறித்து சிபிஐ விசாரணை நடத்த வேண்டும் என்றும் மாணவர்கள் வலியுறுத்தி வருகின்றனர்.

>>>>>><<<<<<

கேரள மாநிலத்தில் போதைப்பொருளுக்கு எதிரான *Operation Toofan* நடவடிக்கை தீவிரப்படுத்தப்படும் என்று அம்மாநில உள்துறை அமைச்சர் திரு. ரமேஷ் சென்னிதலா தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், ஓணம் பண்டிகையின் போது, போதைப்பொருள் கடத்தல்களை தடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

*Operation Toofan* நடவடிக்கையின் இரண்டாவது கட்டம், திருவோணத்திற்குப் பிறகு தொடங்கப்படும் என்று அவர் கூறியுள்ளார்.

>>>>>><<<<<<

பல்கலைக் கழக மானியக்குழு கடந்த ஜூன் மாதம் நடத்திய, தேசிய தகுதித் தேர்வுக்கான விடைகளை, தேசிய தேர்வு முகமை இன்று வெளியிட்டது.

இணையதளத்தில் இதனை சரிபார்த்துக் கொள்ளலாம் என்று அந்த முகமை அறிவித்துள்ளது.

வரும் 18ஆம் தேதி வரை 200 ரூபாய் கட்டணம் செலுத்தி, விடைகள் தொடர்பாக புகார் அளிக்கலாம் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

>>>>>><<<<<<

கேரளத்தில் வரும் 26ஆம் தேதி திருவோணம் பண்டிகையை ஒட்டி, இன்று தொடங்கி 10 நாட்கள் கொண்டாட்டங்கள் நடைபெறுகிறது.

அத்தம் நாளான இன்று, மக்கள் வீட்டு வாசலில் பூக்கோலம் இட்டு, ஓணம் கொண்டாட்டங்களை தொடங்கினர்.

இன்று முதல் திருவோணம் வரை, 10 நாட்களுக்கு விதவிதமான பூக்கோலங்களை போட்டு, ஓணம் பண்டிகையை வரவேற்கவுள்ளனர்.

எர்ணாகுளம் மாவட்டம், Tripunithura-யில் Atha Chamaya பேரணி இன்று நடைபெறுகிறது.

சபரிமலை சுவாமி அய்யப்பன் கோவில் மாதாந்திர பூஜைக்காக இன்று நடை திறக்கப்படுகிறது.

ஓணம் சிறப்பு பூஜைகள் வரும் 24ஆம் தேதி தொடங்கி 28ஆம் தேதிவரை நடைபெறும் என்று எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

>>>>>><<<<<<

மேற்குவங்க மாநில முதலமைச்சர் திரு. Suvendu Adhikari, ஆயுஷ்மான் பாரத் திட்டத்தை இன்று தொடங்கி வைக்கிறார்.

அம்மாநிலத்தில் உள்ள தகுதியுடையவர்களுக்கு சுகாதார காப்பீடு வழங்க இந்த திட்டம் வழிவகை செய்கிறது.

ஆயுஷ்மான் பாரத் காப்பிட்டுத் திட்டத்தை செயல்படுத்தும் 36வது மாநிலமாக மேற்குவங்கம் விளங்கவுள்ளது.

இந்த திட்டத்தின் கீழ் ஒன்றரை கோடி குடும்பங்கள் பயனடையவுள்ளதாக அம்மாநில அரசு தெரிவித்துள்ளது.

இதன்மூலம் 5 லட்சம் ரூபாய் வரை இலவச சிகிச்சை அளிக்கப்படும்.

மேற்குவங்கத்தில் உள்ள ஆயிரத்து 307 தனியார் மருத்துவமனைகளும், 627 அரசு மருத்துவமனைகளும், ஆயுஷ்மான் பாரத் திட்டத்தின் கீழ் சிகிச்சை அளிக்கவுள்ளன.

>>>>>><<<<<<

ஒடிசாவில் நக்ஸலைட்டுகளை ஒடுக்க, அப்பகுதியில் நலத்திட்டங்களை செயல்படுத்துவது மிகவும் அவசியம் என்று அம்மாநில காவல்துறை உயரதிகாரி திரு. Sathyajit Naik தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக அவர் தாக்கல் செய்த அறிக்கையில், ஒடிசாவில் நக்ஸல் தீவிரவாதம் ஒழிக்கப்பட்டு வருவதாக குறிப்பிட்டுள்ளார்.

அப்பகுதிகளில் சமூக பொருளாதார வளர்ச்சியை ஏற்படுத்துவதற்கான அவசியம் குறித்து அவர் வலியுறுத்தினார். நக்ஸல் இல்லாத பகுதி என்று கூறுவதை விட, வளர்ச்சியடைந்த பகுதி என்று மாற்ற முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும் என்று திரு. Sathyajit Naik தெரிவித்துள்ளார்.

>>>>>><<<<<<

தமிழகத்தின் மாமல்லபுரத்தில் நடைபெற்று வரும் சர்வதேச காற்றாடித் திருவிழா இன்றுடன் நிறைவடைகிறது.

நேற்று முன்தினம் தொடங்கிய இந்த காற்றாடித் திருவிழாவில் இந்தியா, தாய்லாந்து, சிங்கப்பூர் உள்ளிட்ட பல்வேறு நாடுகளைச் சேர்ந்தவர்கள் கலந்துகொண்டதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

*(Voice Byte - Sureka - 43 Sec)*

>>>>>><<<<<<

பெல்ஜியத்தில் ஏற்பட்டுள்ள காட்டுத் தீ காரணமாக, இரண்டாயிரம் ஹெக்டேர் வனப்பகுதிகள் சேதமடைந்துள்ளன.

கிழக்கு பெல்ஜியத்தில் நேற்று முன்தினம் தொடங்கிய இந்த காட்டுத் தீயை அணைக்கும் முயற்சியில் தீயணைப்பு வீரர்கள் முழுவீச்சில் ஈடுபட்டுள்ளனர்.

அப்பகுதியிலிருந்து 600க்கும் மேற்பட்டோர் பாதுகாப்பான இடங்களுக்கு அப்புறப்படுத்தப்பட்டுள்ளனர்.

மேலும், முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக *Waimes* நகரிலிருந்து 500 குடும்பங்கள் வெளியேற்றப்பட்டுள்ளதாக அந்நாட்டு அரசு தெரிவித்துள்ளது.

தீயை கட்டுப்படுத்துவதற்கு உதவும் வகையில், அண்டை நாடுகளான நெதர்லாந்து, செக் குடியரசு, ஸ்வீடன் நாட்டு ஹெலிகாப்டர்கள் ஈடுபட்டுள்ளன.

>>>>>><<<<<<

ஒடிசாவில் தொடர் கனமழை காரணமாக, பல்வேறு பகுதிகள் மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ளன.

*Jajpur, Bhadrak* மாவட்டங்களின் தாழ்வான இடங்களில் மழைநீர் சூழ்ந்துள்ளது.

*Baitarani, Kochila* ஆறுகளில் வெள்ளம் பெருக்கெடுத்துள்ளது.

நாளை மறுநாள் வரை கனமழை நீடிக்கும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

மணிக்கு 40 கிலோமீட்டர் வேகத்தில் காற்று வீசக்கூடும் என்பதால், மீனவர்கள் கடலுக்கு மீன்பிடிக்கச் செல்ல வேண்டாம் என்று எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

>>>>>><<<<<<

உலகக் கோப்பை ஹாக்கிப் போட்டியின் மகளிர் பிரிவில் இந்தியா இன்று சீனாவை எதிர்கொள்கிறது.

*நெதர்லாந்தின் Amstelveen-ல் இப்போட்டி மாலை மணி 4.30-க்கு தொடங்குகிறது.*

*>>>>>><<<<<<<*

*Galle-ல் நடைபெறும் இந்தியா – இலங்கை இடையேயான கிரிக்கெட் டெஸ்ட் போட்டியின் இரண்டாவது நாள் ஆட்டம், இன்று மழை காரணமாக தடைபட்டுள்ளது.*

*டாஸ் வென்று முதலில் பேட் செய்த இந்தியா, நேற்றைய ஆட்டநேர இறுதியில் 2 விக்கெட் இழப்புக்கு 288 ரன் எடுத்தது.*

*Devdutt Padikkal 131 ரன்னுடனும், ரிஷப் பந்த் 27 ரன்னுடனும் களத்தில் உள்ளனர்.*

*>>>>>>END<<<<<<<*